DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.18/2024**

**2025-ம் ஆண்டு ஜூலை திங்கள் 23- ம் நாள் புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 1-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 1 | தொழில் | - | ஓட்டுனர் TNSTC |
| பெயர் | - | பெருமாள் | வட்டம் | - | பொள்ளாச்சி |
| த/பெ | - | வி.சுப்பன் | சமயம் | - | |
| கிராமம் | - | கரியன்செட்டிபாளையம் | வயது | - | 40/2025 |
| சாதி | - | | | | |

**<u>23-07-2025</u>**

**(1, 2 எதிரிகள் ஆஜர்)**

(எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்த குவிமுச பிரிவு 311-ன் கீழான மனு Crlmp.No.850/2025 அனுமதிக்கப்பட்டு சாட்சி திரும்ப அழைத்து விசாரிக்கப்பட்டார்)

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

சம்பவதினத்தன்று நான் ஓட்டிவந்த பேருந்து ஆரம்பத்தில் உக்கடம் கிளையில் இயக்கப்பட்டது என்றால் சரிதான். அதற்கு பின்பு அதே பேருந்து வால்பாறை கிளையிலும் இயக்கப்பட்டது என்றால் அது எனக்கு தெரியாது. பொள்ளாச்சி கிளை -2 யிலிருந்து அந்த பேருந்து எந்த வருடத்திலிருந்து இயக்கப்படுகிறது என்றால் அது தெரியவில்லை. பொள்ளாச்சி கிளை -2 ல் மேற்படி பேருந்தை இயக்கிய நாளிலிருந்து இரவு 08.30 மணிக்கு கோயம்புத்தூர் சென்று கோயம்புத்தூரிலிருந்து பொள்ளாச்சி வந்து வாகனத்தை நிறுத்தியும், பின்பு மறுநாள் காலை 06.00 மணியளவில் வாகனத்தை இயக்கி கோயம்புத்தூர் செல்லவேண்டும் என்றும் அதனால் 80 கி.மீ.துாரம் அதிகம் இயக்கவேண்டியுள்ளது என்று பணிசுமை அதிகமாக இருப்பதாகவும், அதனால் அந்த வாகனத்தை உக்கடம் கிளைக்கே கொடுத்துவிடுங்கள் என்று பொள்ளாச்சி கிளை-2 லில் உள்ள ஓட்டுனர்கள் சொல்லிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் அது எனக்கு தெரியாது. நான் 10 வருடமாக பொள்ளாச்சி கிளையில் தான் வேலை செய்கிறேனா என்றால் ஆமாம். சம்பவதினத்தன்று நான் இயக்கிய ஷேக்கல்முடி பேருந்து எத்தனை வருடங்களாக நான் இயக்கிவருகிறேன் என்றால் 7 வருடங்களாக நான் இயக்கிவருகிறேன். சம்பவதினத்தன்று மேற்படி பேருந்தை நான் எங்கிருந்து ஓட்டுனராக இயக்கினேன் என்றால் பொள்ளாச்சி கிளை -2 லிருந்து இயக்கினேன். மேற்படி பேருந்தை பயணிகளுடன் பொள்ளாச்சி கிளை -2 லில் நிறுத்தி மீண்டும் அங்கிருந்து பயணிகளுடன் இயக்குவது வழக்கம் என்றால் சரிதான். சம்பவதினத்தன்று எத்தனை மணிக்கு மேற்படி பேருந்து பொள்ளாச்சி கிளைக்கு வந்தது நான் எத்தனை மணிக்கு அங்கிருந்து பேருந்தை எடுத்தேன் என்றால் அன்றைய தினம் மதியம் 02.30 மணியளவில் பேருந்து வந்தது. பேருந்தில் வேலைகள் இருந்ததால் அதனை சரிசெய்துவிட்டு நான் அன்றைய தினமே மாலை 06.00 மணியளவில் இயக்கினேன். வழக்கமாக அந்த பேருந்து மதியம் 2.15 மணிக்கு பொள்ளாச்சியில் இருந்து

கோயம்புத்தூர் உக்கடம் செல்லும் என்றால் சரிதான். உக்கடத்திலிருந்து 03.45 மணிக்கு எடுத்து ஷேக்கல்முடி வருவோம் என்றால் சரிதான். சம்பவதினத்தன்று உக்கடம் போகவில்லை என்றால் சரிதான். இந்த விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்னே என்றால் இல்லை. வழக்கமாக பொள்ளாச்சியிலிருந்து மாலை 05.10 மணிக்கு வாகனம் இயக்கப்படும் என்றால் சரிதான். வால்பாறைக்கு 7.45 மணிமுதல் 08.00 மணிக்குள் வந்துவிடுவோம் என்றால் சரிதான். அன்றைய தினம் பொள்ளாச்சியிலிருந்து எத்தனை மணிக்கு வாகனம் இயக்கப்பட்டது என்றால் மாலை 06.00 மணியளவில் இயக்கப்பட்டது. 06.20 புதுக்காடு பஸ்சுக்குமுன்பு நான் இயக்கிவந்த பஸ் வந்தது என்றால் சரிதான். 06.00 மணிக்கு பொள்ளாச்சியிலிருந்து ஹைபாரஸ்ட் பஸ் உள்ளது என்றால் 05.50 மணிக்கு உள்ளது. வால்பாறை ஸ்டேன்மோர் சங்சன் என்பது பேருந்து நிறுத்துமா அல்லது பேருந்து நிலையமா என்றால் பேருந்து நிறுத்தமாகும். பேருந்து நிறுத்ததில் பயணிகளை இறக்கிவிட்டு ஏற்றிசெல்லவேண்டும் என்றாலும் பஸ்சை அங்கு நிறுத்தவேண்டிய அவசியம் இல்லை என்றாலும் சரிதான். வழக்கமாக ஸ்டேன்மோர் சங்சனில் 20 நிமிடங்கள் பேருந்தை நிறுத்தி வைப்போம் என்றால் பயணிகள் வருவதற்காக 10 நிமிடம் நிறுத்துவோம். நான் வழக்கமாக வாகனத்தை இயக்கும் நேரமான சரியான நேரத்தில் வாகனத்தை இயக்காததால் காலதாமதமாக வாகனத்தை இயக்கியதாலும் பணிசுமையின்காரணமாகவும் எனக்கு ஏற்பட்ட கோபத்தை நான் எதிரிகள் மீது காட்டி நான் தான் அவர்களை திட்டினேன் என்றால் சரியல்ல. சம்பவதினத்தன்று பேருந்திலிருந்து நான் கீழே இறங்கிவந்துதான் எதிரிகளிடம் பேசினேன் என்றால் வழிவிடுமாறு கேட்டேன். எனக்கு எவ்வளவு கால இடைவெளி பயிற்சி கொடுப்பார்கள் என்றால் வருடத்திற்கு ஒருமுறை பயிற்சி கொடுப்பார்கள். பயிற்சியில் என்ன சம்பவம் நடந்தாலும் ஓட்டுனர் இருக்கையை விட்டு இறங்ககூடாது என்று சொல்லித்தருவார்கள் என்றால் சூழ்நிலையை பொறுத்து தேவைப்படும் இடங்களில் இறங்கலாம் என்று சொல்லிக்கொடுத்துள்ளார்கள். நான் சொல்லுவது போல சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் எதிரிமீது தவறாக புகார் கொடுத்துள்ளேன் என்றாலும் சரியல்ல. பேருந்தை காலதாமதமாக இயக்கிவந்து திரும்ப ஷேக்கல்முடி செல்லவேண்டும் என்பதற்காக எதிரிகள் மீது தவறாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

<u>**மறு விசாரணை**</u> :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.

DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.18/2024**

**2025-ம் ஆண்டு ஜுலை திங்கள் 23- ம் நாள் புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 2-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 2 | தொழில் | - | நடத்துனர் TNSTC |
| பெயர் | - | கருப்பசாமி | வட்டம் | - | பொள்ளாச்சி |
| த/பெ | - | வேலுச்சாமி | சமயம் | - | |
| கிராமம் | - | ஆழியார் | வயது | - | 53/2025 |
| சாதி | - | | | | |

**<u>23-07-2025</u>**

**(1, 2 எதிரிகள் ஆஜர்)**

(எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்த குவிமுச பிரிவு 311-ன் கீழான மனு Crlmp.No.850/2025 அனுமதிக்கப்பட்டு சாட்சி திரும்ப அழைத்து விசாரிக்கப்பட்டார்)

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

பேருந்தில் மொத்தம் எத்தனை இருக்கைகள் உள்ளது என்றால் 52 +2 உள்ளது. +2 என்பது என்ன என்றால் ஓட்டுனர் நடத்துனருக்கான இருக்கைகள் ஆகும். நடத்துனருக்கு பேருந்தில் முன்னாள் உள்ள இருக்கையா பின்னால் உள்ள இருக்கையா என்றால் பகல் நேரத்தில் பின் இருக்கையும் இரவு நேரத்தில் முன் இருக்கையும் இருக்கும். பொள்ளாச்சி கிளைக்கும் பொள்ளாச்சி பஸ்ஸ்டாண்டிற்கும் இடைப்பட்ட தூரம் எவ்வளவு இருக்கும் என்றால் 1 கிமீ தூரம் இருக்கும். பொள்ளாச்சி கிளையில் இருந்து பேருந்து நிலையத்திற்கு பேருந்து வருவதற்கு 20 நிமிடங்கள் ஆகும் என்றால் 5 நிமிடங்கள் ஆகும். போலீசார் என்னை எங்குவைத்து எத்தனைமணிக்கு விசாரித்தார்கள் என்றால் ஸ்டேன்மோர் முக்கில் வைத்து இரவு 09.00 மணிக்கு விசாரித்தார்கள். புகார் அ.சா.1 எத்தனைமணிக்கு கொடுத்தார் என்றால் இரவு 11.00 மணி இருக்கும். சம்பவதினத்தன்று ஷேக்கல்முடிக்கு பேருந்து போனதா என்றால் இல்லை. என்னை போலீசார் அன்றையதினம் 09.00 மணிக்கு விசாரித்தற்கு பின்பு தற்போது வரை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். மறுநாள் காலை பேருந்து ஷேக்கல்முடிக்கு இயக்குனோமா என்றால் இல்லை. பேருந்தை மதியம் 02.00 மணிக்கு பொள்ளாச்சி கிளையில் எடுத்து 06.25 மணிக்கு பொள்ளாச்சி பஸ்ஸ்டாண்டு வந்ததாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அன்றைய தினம் உக்கடம் போனோமா என்றால் உக்கடம் போய்தான் வந்தோம். சம்பவதினத்தன்று மதியம் 02.00 மணிக்கு பேருந்தை யார் இயக்கியது என்றால் அ.சா.1 பெருமாள் இயக்கினார். எத்தனைமணிக்கு உக்கடம் சென்றோம் எத்தனை மணிக்கு அங்கிருந்து பேருந்தை எடுத்தோம் என்றால் 03.45 மணிக்கு சென்று அப்போதே வாகனத்தை எடுத்துவிட்டோம். உக்கடத்திலிருந்து பொள்ளாச்சி பஸ் நிலையத்திற்கு வருவதற்கு

ஒருமணி நேரம் ஆகும் என்றால் சரிதான். வழக்கமாக 03.45 மணிக்கு உக்கடம் பஸ் நிலையத்திலிருந்து பேருந்தை இயக்கி 04.45 மணிக்கு பொள்ளாச்சி பஸ் நிலையத்திற்கு வந்து அங்கிருந்து 05.10 மணிக்கு ஷேக்கல்முடி வருவதற்கு இயக்குவோம் என்றால் சரிதான். 04.30 மணிக்கு எங்கள் பேருந்துக்கு முன்பு வால்பாறை கிளை பேருந்து ஒன்று வால்பாறைக்கு பொள்ளாச்சி பஸ் நிலையத்தில் இருந்து இயக்கப்படும் என்றால் 04.50 மணிக்கு உள்ளது. சம்பவதினத்தன்று பொள்ளாச்சி பஸ் நிலையத்திலிருந்து பஸ் இயக்கப்பட்டது என்றால் அன்றைய தினம் 04.45 மணிக்கு பொள்ளாச்சி பஸ் நிலையம் வந்து பேருந்து வேலையாக இருந்ததால் பயணிகளை பஸ் நிலையத்தில் இறக்கிவிட்டு பொள்ளாச்சி கிளைக்கு பேருந்தை இயக்கிசென்று சரிசெய்து மீண்டும் அங்கிருந்து 06.00 மணிக்கு எடுத்துவந்தோம். உக்கடத்திலிருந்து வால்பாறை வந்த பயணிகளை பொள்ளாச்சியில் பஸ்மாத்திவிட்டோமா அல்லது பொள்ளாச்சி பஸ் நிலையத்தில் இறக்கிவிட்டோமா என்றால் வேறு பஸ்சில் மாற்றிவிட்டோம். குறிப்பிட்ட நேரத்தில் பேருந்தை இயக்கிவரவில்லை என்றால் பயணிகளுக்கும் எங்களுக்கும் பிரச்சனை ஏற்படும் என்றால் பயணிகள் கேட்பார்கள். எங்களுக்கு பயணிகளிடம் அன்பாகவும் கனிவாகவும் பேசவேண்டும் என்று பயிற்சியளித்துள்ளார்கள் என்றால் சரிதான். போலீசார் விசாரணையில் பஸ் ரிப்பேர்ராகி இருந்த விவரத்தை சொல்லியுள்ளோமா என்றால் இல்லை. சம்பவதினத்தன்று ஷேக்கல்முடி செல்லும் பயணிகளை வேறு வாகனத்திற்கு மாற்றிவிட்டோமா என்றால் இல்லை. வழக்கமாக பொள்ளாச்சிலிருந்து ஷேக்கல்முடிக்கு வரும் பயணிகளுக்கு வால்பாறை வரை தான் டிக்கட் கொடுப்போம். பின்பு வால்பாறையிலிருந்து ஷேக்கல்முடி செல்லும் போது ஷேக்கல்முடி டிக்கட் கொடுப்போம். காந்திசிலை பஸ் ஸ்டாண்டில்லிருந்து பயணிகள் ஏறினாள் ஷேக்கல்முடி டிக்கட் கொடுப்போமா என்றால் யாரும் அவ்வாறு வரவில்லை. நான் சொல்வது போல சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் அ.சா.1 நான்நடத்துனராக உள்ள அதே கிளையில் ஓட்டுனராக இருப்பதால் அவருக்கு ஆதரவாக நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் வழக்கு சம்பவத்திற்கும் சம்பந்தம் அல்ல என்றால் சரியல்ல. போலீசார் விசாரணையில் எத்தனை மணிக்கு பஸ் எடுத்தோம் என்பதற்கான Invoice கொடுத்தோமா என்றால் இல்லை.

<u>**மறு விசாரணை**</u> :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.